# முன் மருத்துவ உத்தரவு (AMD)

## வாழ்க்கையை நயமாகச் சமாளிக்க வேண்டும். அன்புக்குரியவர்கள் மீது விழும் பாரத்தைக் குறைக்க முன்கூட்டியே திட்டமிடுங்கள்.



நமது உயிர் உட்பட, வாழ்க்கையில் பல வற்றையும் நாம் மெத்தனமாகக் கருதி விடுவதுண்டு.

பல சமயங்களில் கடுமையான நோய் அல்லது விபத்து பாதிக்கும் வரை காத்திருந்துவிட்டு, அதன் பிறகே வாழ்க்கையைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் நாம் சிந்திக்கத் தொடங்குகிறோம். கடைசி மூச்சு விடும்போது இயற்கையாகவும், அமைதியாகவும், கௌரவத்துடனும் மரணமடையவே பலரும் விரும்புவார்கள்.

ஒரு தீராத நோயின் இறுதிக் கட்டத்தில் இந்த விருப்பத்தை நம்மால் வெளியிட முடியாமல் போய்விட்டால் உண்மையில் அது வருந்தத்தக்கதே. விருப்பத்தை நாம் வெளியிட்டு இருந்தால், தீராத நோயின் இறுதிக் கட்டத்தில் முடிவெடுக்கும் இக்கட்டான நிலையில் நமது அன்புக்குரியவர்கள் தவிக்க வேண்டியதில்லை.

நாம் முன் மருத்துவ உத்தரவின் (AMD) துணையுடன் எதிர்காலப் பயணத்திற்குத் திட்டமிட முடியும். இது உங்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

### முன் மருத்துவ உத்தரவு (AMD) என்பது என்ன?

முன் மருத்துவ உத்தரவு (AMD) என்பது நீங்கள் முன்கூட்டியே கையெழுத்திடும் சட்டபூர்வப் பத்திரம். நீங்கள் தீராத நோயுற்று* சுயநினைவை இழந்துவிட்டால், உங்கள் ஆயுளை நீட்டிக்க உயிர்காப்பு மருத்துவச் சிகிச்சை எதுவும் வேண்டாம் என்று உங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவரிடம் இப்பத்திரம் தெரிவிக்கும்.

முன் மருத்துவ உத்தரவு என்பது கருணைக் கொலை அல்ல. கருணைக் கொலை என்பது, குணமாக்க முடியாத, வலிமிக்க நோயால் வாடும் ஒருவரின் உயிரை மாய்க்க, இயற்கைக்குப் புறம்பான செயல்களை வேண்டுமென்றே செய்வதாகும். எடுத்துக்காட்டாக, நச்சுத் தன்மையுள்ள இரசாயனங்களை உடலில் செலுத்துதல்.

*தீராத நோய் என்பது, காயம் அல்லது நோயால் ஏற்படும் குணமாக்க முடியாத உடல்நலப் பிரச்னையைக் குறிப்பதாகச் சட்டம் சொல்கிறது. இப்பிரச்னையிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகக் குணமாகக்கூடிய சாத்தியம் இருக்காது. இதுபோன்ற நிலையில், சிறப்பு உயிர்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நோயாளி எந்த நேரத்திலும் மரணம் அடையலாம். சிறப்பு உயிர்காப்பு நடவடிக்கைகளால் நோயாளியின் மரணத்தை ஒத்திவைக்க மட்டுமே முடியும்.

### நான் எப்போது முன் மருத்துவ உத்தரவு செய்யவேண்டும்?

எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாதபோது முன் மருத்துவ உத்தரவு செய்வதே சிறந்தது. அதாவது, நீங்கள் நலமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்போது உங்கள் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்தால், முன் மருத்துவ உத்தரவு செய்வதற்கு முன்பாக அவர்களது புரிந்துணர்வை நீங்கள் பெற விரும்பலாம். உங்கள் குடும்பத்தாரிடம் நீங்கள் தெரிவிக்க விரும்பாவிட்டாலும், முன் மருத்துவ உத்தரவு செய்யலாம். நீங்களாக யாரிடமாவது தெரிவிக்க விரும்பும் வரையில் அது ரகசியமாக வைத்திருக்கப்படும்.

### நான் எப்படி முன் மருத்துவ உத்தரவு செய்வது?

சரியான மனநிலையுடன், 21 வயது, அதற்கும் மேற்பட்ட வயதுள்ள எவரும் முன் மருத்துவ உத்தரவு செய்யலாம். இதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்து, இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் கையெழுத்திட்டு, முன் மருத்துவ உத்தரவு பதிவாளரிடம் தந்தால் போதும். சுகாதார அமைச்சின் இணையத் தளத்திலிருந்து படிவத்தை நீங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.

மேல்விவரங்களுக்கு, www.moh.gov.sg/amd எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும் அல்லது **1800-225 4122** என்ற எண்ணில் அழைக்கவும்.

MINISTRY OF HEALTH
SINGAPORE